விண்ணக மேகம் இறங்கணும்
வல்லமை மழையாய் பொழியணும் -2
குளங்கள் நிரம்பணும்
நதியாய் பாயணும் -எல்லா

இடங் கொள்ளாமல் போகுமட்டும்
இறங்கி வரணும் பெருமழையாய் -2
எழுப்புதல் தேசத்தில் (சபையில்)
காணவேண்டும் -2
கண்கள் காணவேண்டும் -ராஜா-2
(குளங்கள)(விண்ணக)

தூதர் கூட்டம் இறங்கிஏறணும்
பரலோக ஏணி படிகளிலே -2
யாக்கோபின் தேவன்
சத்தம் கேட்கணும் -2
சபைகள் கேட்கணுமே -ராஜா-2
(குளங்கள)(விண்ணக)

ஆதி திருச்சபை அற்புதங்கள்
நடக்கணுமே எங்கள் சபைகளிலே -2
குருடர் பார்க்கணும் செவிடர் கேட்கணும் -2
முடவர் நடக்கணுமே -ராஜா-2
(குளங்கள)(விண்ணக)